## இயல் 2
# துணைப்பாடம் – புயலிலே ஒரு தோணி

முன்னுரை:

பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தெற்காசிய நாடுகளில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்தவர்கள் குடியேறினர். நூலாசிரியர் சிங்காரம் அவ்வாறு புலம்பெயர்ந்த தமிழர்களில் ஒருவர். அவர் இந்தோனேஷியாவில் மெபின் நகரில் இருந்தபோது இரண்டாம் உலகப்போர் நிகழ்ந்தது. ஆசிரியரின் நேரடி அனுபவங்களோடு கற்பனையும் கலந்த கதைதான் இந்தப்புதினம்.

மேகப்பொதிகள்:

கொளுத்திக்கொண்டிருந்த வெயில் இமைநேரத்தில் மறைந்துவிட்டது. புழுங்கிற்று. மேகப்பொதிகள் பரந்து கும்மிருட்டாய் இறுகி நின்றன. அலைகள் எண்ணெய் பூசியவை போல் மொழு மொழுவென நெளிந்தன. வானையும் கடலையும் மாறிமாறிப் பார்த்தவாறு கப்பித்தானுடன் பரபரப்பாகப் பேசிக்கொண்டிருந்த மாலுமிகள் திடுமெனப் பாய்மரத்தை நோக்கி ஓடிச்சென்று கட்டுக்கயிறுகளை இறுக்குகிறார்கள். இடி முழக்கத்துடன் மின்னல் கீற்றுகள் வானைப் பிளந்தன. இதையெல்லாம் பாண்டியன் எழுந்துபோய் அண்ணாந்து பார்த்தான்.

தொங்கானின் தத்தளிப்பு:

வானம் உடைந்து கொட்டு கொட்டென்று வெள்ளம் கொட்டியது. சூறாவளி மாரியும் காற்றும் கூடிக்கலந்து ஆடிக்குதித்துக் கெக்கலித்தன. தொங்கான் அப்படியும் இப்படியுமாய்த் தாவிக்குதித்து விழுந்து திணறித் தத்தளிக்கிறது. எலும்புகள் முறிவதுபோல் நொறு நொறு நொறுங்கல் ஒலி. தாவும் பேயுருவங்கள், சுறாமீன், ரம்பப்பல், காற்றோலக் கடல், சீற்ற மழை, உடலயர்வுப் புலன் மயக்கம். பலகை அடைப்புக்குள்ளிருந்து கப்பித்தான் காப்பாற்றுங்கள் என்று கத்துகிறான். பாண்டியன் எழுந்தான்.

கடல் கூத்து:

வானும், கடலும், வளியும், மழையும் மீண்டும் ஒன்று கூடிக்கொந்தளிக்கின்றன. வானம் பிளந்து தீ கக்கியது. மழை வெள்ளம் கொட்டுகிறது. வளி முட்டிப் புரட்டுகிறது. கடல், வெறிக் கூத்தாடுகிறது. தொங்கான் நடுநடுங்கித் தாவித்தாவிக் குதிகுதித்து விழுவிழுந்து நொறு நொறுங்குகிறது. முகத்தில், உடலில், காலில், கையில் இறுக்கி ரம்பமாய் அறுக்கிறது. தொங்கான் தாவி விழுந்து சுழல்கிறது. மூழ்கி நீந்துகிறது. தாவி நீந்துகிறது.

இனிமேல் பயமில்லை:

திடீரென சூரிய வெளிச்சம்.சூரியன் சூரியன் சூரியன்.தொங்கானில் நீர் நெளிகிறது. பாய்மரம் ஒடிந்து கிடக்கிறது. மரம் வெட்டுகிறார்கள், செதுக்குகிறார்கள். தொங்கானின் இருபுறமும், பின்னேயும் தேயிலைப்பெட்டிகளும், புகையிலைச் சிப்பங்களும் மிதந்து வருகின்றன. இனிமேல் பயமில்லை. இரண்டு நாளில் கரையைப் பார்க்கலாம் என்றான். பாண்டியன் நாற்புறமும் கடலைப் பார்த்து மலைத்து நின்றான்.

கரையை நெருங்குதல்:

தொங்கான் மிதந்து சென்றது, கடலின் இழுவைக்கிணங்கி. பகல் இரவாகி பகலாகி இரவாகியது. பிறைமதி வெளிச்சம் சிந்திற்று.அவுலியா மீன்கள் நீந்தின. கூடற்கூத்துக்குப்பின் ஐந்தாம் நாள் வானோடு வானாய்க் கடலோடு கடலாய் மரப்பச்சை தெரிந்தது. மீன்பிடி படகு விளக்குகள் தென்பட்டன.கரை கரை கரை! அடுத்தநாள் முற்பகலில் பினாங்குத் துறைமுகத்தை அணுகினார்கள்.

முடிவுரை:

தொங்கான் கரையை நெருங்கிப் போய் நின்றது. பயணிகள் இறங்கி, சுங்க அலுவலகத்திற்குச் சென்றனர். பயணச் சீட்டுகளை காட்டினர். ஜப்பானிய அதிகாரி “தமிரோ’? என்று உறுமினார். தமிழர்கள்தாம் என்று தலைகுனிந்து வணங்கினர். பின், அதிகாரி சீட்டில் முத்திரைப் பதித்துத் திருப்பிக் கொடுத்துத் தமிழர்களை அனுப்பினார்.